# மே– 01 – புதன்

## "அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை" யோவா 3:18

### முதல் வாசகம்: தொடக்க நூல் 1: 26 –2 : 3

அந்நாட்களில் கடவுள் "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார்.கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.கடவுள் அவர்களுக்கு ஆசிவழங்கி, "பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.அப்பொழுது கடவுள்,"மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள் அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும்.எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று.கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசிவழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து அந்நாளில் தான் ஓய்ந்திருந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நாங்கள் செய்பவற்றில் வெற்றி அருளும்

### நற்செய்தி : மத்தேயு 13 : 54 - 58

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், "எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோப்பு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?" என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், "தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப்பெறுவர்" என்றார். அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்கு பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**தியானம்:** இன்று தொழிலாளர் தினம். உளைக்கின்ற அனைத்து மக்களையும் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரிடம் ஒப்புக்கொடுத்து அவர்களுக்காக மன்றாடுவோம். விசேடமாக குழந்தை தொழிலாலர்களையும், உயிர் ஆபத்தான இடங்களில் வேலை செய்பவர்களையும் இறைவன் பாதுகாத்திட வேண்டுவோம். கிறிஸ்த்தவர்களாகிய நாம் எமது வாழ்வை விசுவாசத்தினால்தான் கட்டிக் காக்க முடியும். அதற்கு பல வழிகளில் தடைகள் வரலாம். அவற்றை தாங்கி நிலைத்து நிற்கும் போதுதான் எம்மால் வெற்றி பெறமுடியும். முதல் வாசகத்தில் சீடர்கள் இறை அரசை அறிவிக்கின்றார்கள் என்ற காரணத்தால் அவர்களை சிறையில் அடைக்கின்றார்கள். ஆனால் இறைவன் அவர்களை விடுவிக்கின்றார். பூட்டிய சிறைக்கதவுகளும், காவலர்களும் இருந்தும் என்ன பயன்? யேசுவையும் கல்லறையில் அடக்கம் பண்ணி பெரிய கல்லால் அடைத்து காவல் போட்டார்கள். என்ன நடந்தது? யேசு உயிருடன் எழ அவை தடைகளாக இருந்ததா? எனவே தடைகள் எல்லாம் தடைகளே அல்ல. அவற்றை படிகளாக மாற்ற இறைவனால் முடியும். நற்செய்தியில் யேசு இதனையே குறிப்பிடுகின்றார். நாம் ஒளியின் பாதையில் நடக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். மாறாக இருளில் வாழ முடியாது. இன்று பலருடைய வாழ்வும், மனமும் இருட்டில் உள்ளது. அதனால் தான் பலவகையான அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. அண்மையில்கூட நியூசிலாந்தில் மசூதியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் பலர் கொல்லப் பட்டனர். இதில் குழந்தைகளும் சிறுவர்களும் அடங்கும். ஒரு தனி மனிதனின் இருளடைந்த மன உளைச்சல் பலரின் வாழ்வை அழித்துள்ளது. இருளில் வாழ்வோரினால் ஒளியில் வாழும் மக்களின் வாழ்வு அழிக்கப் படுகின்றது. எனவே இருளடைந்து இறுகிப் போயிருக்கும் உறவுகளும், உள்ளங்களும் ஒளியின் பாதைக்கு திரும்பிட விசேடமாக மன்றாடுவோம்.